மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**OS No.52/2024(Old OS No. 118/2011 )**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr -III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : சேதுராஜ் ( வா.சா.4 )<br>த/பெ.<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

**02.01.2026**

நான் இந்த வழக்கின் 3 ம் நபர் ஆவேன். வா.சா.4 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதற்காக IA.No.12/25 மனுதாக்கல் செய்யப்பட்டு கடந்த 26.09.2025 ம் தேதி அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வா.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**2, 5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1 ம் பிரதிவாதி மற்றும் 2 ம் பிரதிவாதி உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். வாதி 1 ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி வாதியின் சின்னம்மா என்றால் சரிதான். எந்த வருடத்தில் 1, 2, 3 பிரதிவாதிகள் வாதிகளுக்கு பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் 2004 ம் வருடம் எழுதி கொடுத்தார்கள். நான் சாட்சி கையெழுத்து போட்டதால் எனக்கு ஆவணத்தில் இருக்கும் நபர்கள் யார் யார் என்றும், அவர்கள் தான் ஆவணத்தை எழுதினார்கள் என்ற சங்கதி மட்டும் தான் தெரியும் என்றும், சொத்து யாருக்கு பாத்தியம் என்பதோ அல்லது சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்ற சங்கதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதியிடம் 1, 2, 3 பிரதிவாதிகள் எந்தவித தொகையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. சொந்த மகனுக்கு தாயார் கிரையம் கொடுக்க மாட்டார்கள் என்றும், தான செட்டில்மெண்ட் ஆவணம் தான் ஊர் வழக்கப்படி எழுதிகொடுப்பார்கள் என்பதால், கிரையம் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை என்றும், கிரைய

தொகை கை மாறியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியது போல் தாவா சொத்து மதுரை - அருப்புக்கோட்டை ரோடு செல்லும் வழியில் இல்லை என்றும், தாவா சொத்து ஆவியூர் கிராம கண்மாயில் உள்ளது என்றாலும் சரியல்ல. நான் வா.சா.ஆ.1 ஆவணம் கிரையம் செய்யப்பட்ட போது அன்றைய தேதியில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் வேற ஆவணங்கள் எதுவும் தங்களுக்குள் எழுதி கொண்டார்களா என்றால் நான் சாட்சியாக கையொப்பம் செய்த ஒரு வா.சா.ஆ.1 ல் மட்டும் தான் அன்றைய தினம் எழுதினார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர வேற ஆவணங்கள் அன்றைய தினத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் ஒரு மோசடியான ஆவணம் என்றும், வாதிகள் கேட்டுக்கொண்டதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-**

இல்லை.